**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்-மலர்விழி**

**தேதி 6.3.2025 நேரம் மாலை 6.10 மணி**

**---------------------------------------------------------------------**

தலைப்புச் செய்திகள்

உத்தராகண்ட் மாநிலத்தில், **குளிர்கால சுற்றுலா** தொடர்ந்து மேம்படுத்தப்படும் என, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

**சர்வதேச மகளிர் தின**த்தை ஒட்டி, வரும் 8-ஆம் தேதி புதுடெல்லியில் நடைபெற உள்ள, **தேசிய மாநாட்டை**, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தொடக்கி வைக்கிறார்.

புதுச்சேரியில், **சிறப்பு கூறுகள் திட்ட நிதி**யை முழுமையாக செலவிடுவதில், சம்பந்தப்பட்ட துறைகள் ஒருங்கிணைப்பாக செயல்பட வேண்டும் என, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் அறிவுறுத்தி உள்ளார்.

புதுச்சேரியில், புதிய உத்திகள் மூலம் **சைபர் குற்றங்**களை கண்டு பிடிப்பது குறித்து, காவல் துறை அதிகாரிகளுக்கான 2 நாள் பயிற்சி வகுப்பு, இன்று தொடங்கி உள்ளது.

*மோடி-உத்தராகண்ட்-*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று உத்தராகண்ட் மாநிலம் **முக்வா** கிராமத்தில் உள்ள, **கங்கா மாதா**வின் குளிர்காலக் கோவிலில், சிறப்பு பூஜை நடத்தினார். பின்னர் **ஹர்சில் மலைக் காட்சி முனைய**த்தில் இருந்து, இமயமலைச் சரிவின் அற்புதக் காட்சிகளை அவர் பார்வையிட்டார். **மலையேற்ற, மற்றும், பைக்** பேரணிகளையும், பிரதமர் தொடக்கி வைத்தார். தொடர்ந்து பொதுக் கூட்டம் ஒன்றில் பிரதமர் பேசுகையில் உத்தராகண்ட் மாநிலத்தின் இயற்கை வனப்பைக் கண்டுகளிக்க ஏற்ற பருவமே குளிர்காலம் தான் என்றும், மாநிலத்தில் **குளிர்கால சுற்றுலா** தொடர்ந்து மேம்படுத்தப்படுவதால் இனி ஆண்டு முழுவதற்கும் ஏற்ற சுற்றுலாப் பகுதியாக, உத்தராகண்ட் திகழும் என்றும் கூறினார்.

**சார்தாம்** சாலை மேம்பாட்டு திட்டம், ரயில்வே விரிவாக்கம், விமான இணைப்பு மற்றும் கயிற்றுப் பாதை திட்டங்களால், உத்தராகண்ட் மாநிலத்திற்கு வரும் யாத்திரிகர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் பயணம் எளிதாகும் என்று பிரதமர் தெரிவித்தார். **அழியாத ஞாபகப் பதிவு**களுடன், திருமண விழாக்களை நடத்துவதற்கான முக்கிய கேந்திரமாக உத்தராகண்ட் மாநிலத்தை மேம்படுத்த முடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

*மகளிர் தினம்*

இவ்வாண்டு சர்வதேச மகளிர் தினம், **அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கும், உரிமை, சமத்துவம் மற்றும் அதிகாரம்** என்ற கருப்பொருள் அடிப்படையில், வரும் 8-ஆம் தேதி, உலகெங்கிலும் கொண்டாடப்பட உள்ளது. பல்வேறு சோதனைகளைத் தாண்டி வாழ்வில் வெற்றி பெற்ற பெண்கள் தங்களின் வாழ்க்கை கதைகளை, **நமோ ஆப்** செயலியில் பகிர்ந்து கொள்ளலாம் என பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் சாதனையாளர்கள், மகளிர் தினத்தன்று, பிரதமரின் சமூக ஊடக கணக்குகள் மூலம், தங்களின் அனுபவங்களை உரத்துப் பேசலாம் என்றும் பிரதமர் அறிவித்துள்ளார்.

*மகளிர் தினம்-முர்மு*

இதற்கிடையே, **மகளிர் சக்தி மூலம் முன்னேறிய இந்தியா** என்ற கருப்பொருள் அடிப்படையில், மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால், வரும் 8-ஆம் தேதி புதுடெல்லியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, **தேசிய மாநாட்டை**, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தொடக்கி வைக்கிறார். பாதுகாப்பு படைகள் மற்றும் இணை ராணுவ படைகளைச் சேர்ந்த பெண் அதிகாரிகளும், **மை-பாரத்** தன்னார்வலர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், **ஆஷா** பணியாளர்கள், மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களும், பெரும் எண்ணிக்கையில் பங்கேற்க உள்ளனர். **யூனிசெஃப்,** உலக வங்கி உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புகளின் பிரதிநிதிகளும் மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். **SheBuildBharat** என்ற இணைப்புச் சொல்லுடன் கூடிய, சமூக ஊடகப் பிரச்சாரம் ஒன்றுக்கும் அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.

*புதுச்சேரி-வேளாண் விஞ்ஞானி*

புதுச்சேரியில் கூடப்பாக்கத்தைச் சேர்ந்த, பத்மஸ்ரீ விருது பெற்ற வேளாண் விஞ்ஞானி **வெங்கடபதி**யின் மகளும், எம்பிஏ பட்டதாரியுமான **ஸ்ரீலட்சுமி**, தந்தையுடன் இணைந்து, விவசாயத்தில் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளார். இத்தகைய ஆராய்ச்சிகள் மூலம், ஆரஞ்சு, சாக்லேட் மற்றும் பன்னீர் சுவை கொண்ட கொய்யா செடிகளையும், இனிப்புச் சுவை அதிகம் உள்ள, 2 அத்திப்பழ ரகங்களையும் அவர் உருவாக்கி உள்ளார். குளிர் பிரதேசங்களில் மட்டுமே விளையக் கூடிய ஆப்பிள் பழங்களை, வெப்பமான கடலோரப் பகுதிகளிலும் விளைவிக்க முடியும் என்பதை சாதித்துக் காட்டி உள்ளார். காய்க்காத மிளகுச் செடிகளை காய்க்க வைக்க, இயற்கை முறையிலான **கரைசல் ஊக்கி**யை கண்டுபிடித்துள்ளார். தற்போது **எலுமிச்சை மணம்** கொண்ட மிளகு ரகத்தையும் அவர் உருவாக்கி உள்ளார். இத்தகைய சாதனைகளுக்காக, **கவுரவ டாக்டர் பட்டம்**, மற்றும், மத்திய-மாநில அரசுகளின் பல்வேறு விருதுகளை வென்றுள்ள **பெண் வேளாண் விஞ்ஞானி ஸ்ரீலட்சுமி**யை, சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, எமது செய்தியாளர்

பேட்டி கண்ட போது, பெண்கள் விவசாயத் துறையிலும் அதிகம் ஈடுபட்டு சாதனை படைக்க வேண்டும் என்று அவர் கூறினார். ஸ்ரீலட்சுமி மேலும் கூறுகையில்...

(வாய்ஸ்)

*பல்கலைக் கழகம்*

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் புதிய துணை வேந்தராக, ஐதராபாத் பல்கலைக் கழகத்தின் உயிரி தொழில் நுட்பத் துறையைச் சேர்ந்த பேராசிரியர் **ஃபணிதி பிரகாஷ் பாபு**வை நியமித்து, பல்கலைக்கழக வேந்தர் என்ற முறையில், குடியரசு தலைவர் உத்தரவிட்டுள்ளார். திரு பிரகாஷ் பாபு, பதவி ஏற்ற நாளில் இருந்து 5 ஆண்டு காலம், அல்லது, 70 வயது நிறைவு ஆகிய இரண்டில் எது முதலில் வருகிறதோ அதுவரை, துணை வேந்தர் பதவியை வகிப்பார் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*கைலாஷ்நாதன்- ஆதிதிராவிடர்*

புதுச்சேரியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தொடர்பான ஆய்வுக் கூட்டம் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தலைமையில் ராஜ்நிவாசில் இன்று நடைபெற்றது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பணிகளுக்கான, சிறப்பு கூறுகள் திட்ட நிதியின் பயன்பாடு குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. சிறப்பு கூறுகள் திட்ட நிதியை முழுமையாக செலவிட வேண்டும் என்றும் இதில் சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகள் ஒருங்கிணைப்பாக செயல்பட வேண்டும் என்றும் துணை நிலை ஆளுநர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் சாலை. குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கு முக்கியத் துவம் அளிக்கவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் தங்கி படிக்கும் விடுதிகளை மேம்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டது. துணை நிலை ஆளுநரின் செயலர் டாக்டர் மணிகண்டன், ஆதிதிராவிடர் நலத் துறை செயலர் டாக்டர் முத்தம்மா மற்றும் சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளின் தலைவர்களும், அதிகாரிகளும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். இவ்வாண்டு சிறப்பு கூறுகள் திட்ட நிதி, முன் எப்போதும் இல்லாத அளவில், 92 சதவிகிதம் செலவிடப்பட்டுள்ளதாக இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

*புதுச்சேரி-சைபர் குற்றம்*

புதுச்சேரியில் சைபர் குற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், புதுப் புது விதமான சைபர் குற்றங்களை, புதுப் புது உத்திகள் மூலம் கண்டு பிடிப்பது குறித்து, காவல் துறை அதிகாரிகளுக்கான 2 நாள் பயிற்சி வகுப்பு இன்று தொடங்கி உள்ளது. கோரிமேடு காவலர் பயிற்சி பள்ளியில் நடைபெறும் இப்பயிற்சி முகாமை, காவல்துறை தலைவரும், சைபர் கிரைம் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான திரு அஜித்குமார் சிங்லா தொடக்கி வைத்தார். இதுகுறித்து சைபர் கிரைம் காவல்துறை கண்காணிப்பாளர் திரு பாஸ்கரன் எமது செய்தியாளர்களிடம் பேசுகையில்...

(வாய்ஸ்)

*போட்டித் தேர்வு*

புதுச்சேரி அரசின் போக்குவரத்து துறையில், இளநிலை பொறியாளர், மற்றும், துணை மோட்டார் வாகன ஆய்வாளர் பணியிடங்களுக்கான எழுத்து தேர்வு, பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரியில், வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது. தேர்வர்கள் தங்களுக்கான தேர்வுக் கூட அனுமதி சீட்டுக்களை, இன்று மாலை முதல், புதுச்சேரி அரசின் அதிகாரப்பூர்வ வேலை வாய்ப்பு இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*ஜன்விகாஸ்- திட்டம்*

**அனைவருக்கும் வளர்ச்சி-அனைவருக்கும் ஆதரவு** என்பதே மத்திய அரசின் நோக்கம் என்றும், இந்த அடிப்படையில், சிறுபான்மையினர் உட்பட அனைத்து மக்களின் நலன்களை மேம்படுத்த, அரசு உறுதிப்பாடு கொண்டுள்ளதாகவும், மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறி உள்ளார். பல்வேறு மாநிலங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில், சமூக உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான பிரதமரின் **ஜன்விகாஸ் திட்டம்** குறித்து, திருவனந்தபுரத்தில் இன்று நடைபெற்ற, **பிராந்திய மறுஆய்வு கூட்ட**த்தில் அவர் இவ்வாறு கூறினார்.

சுற்றுலா, கல்வி, **மகளிர் அதிகார மேம்பாடு** உள்ளிட்ட முக்கிய துறைகளை, அரசு குறிப்பாக ஆதரிக்கும் என்றும், மக்கள் நலத் திட்டங்களுக்கான நிதியில், பற்றாக்குறை இராது என்றும் அமைச்சர் தெரிவித்தார். மக்களுக்கான திட்டங்களை மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பதில், மத்திய-மாநில ஏஜென்சிகளின் ஒருங்கிணைப்பான முயற்சிகளை அவர் பாராட்டினார்.

பிரதமரின் **ஜன்விகாஸ்** திட்டப் பயனாளிகளுக்கு, காசோலைகள் மற்றும் ஒப்புதல் கடிதங்களை, அமைச்சர் இந்நிகழ்ச்சியின் போது வழங்கினார். மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை இணை அமைச்சர் திரு ஜார்ஜ் குரியன், கேரள அமைச்சர் திரு அப்துல் ரஹ்மான் உள்ளிட்டவர்களும், நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*மாண்டவியா*

ஆரோக்கியமான மக்களைக் கொண்ட நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், **சுகாதார சேவைகள்-நோய்த் தடுப்பு முறைகள்** ஆகிய இரண்டுமே முக்கியம் என்று, மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறி உள்ளார். இன்று அரியானா மாநிலம் **ஃபரிதாபாத்**தில், ஆரோக்கியமான வாழ்க்கை முறைகள் பற்றிய கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய அவர், **சரகர், சுஸ்ருதர், தன்வந்திரி** போன்ற **மருத்துவ முன்னோடி**களை உலகிற்கு வழங்கிய நாடு, இந்தியா என்றும், ஆரோக்கிய வாழ்விற்கான இந்தியப் பாரம்பரியத்தில், **யோகா, தியானம், மற்றும், உபவாசத்**திற்கு முக்கிய இடம் இருப்பதாகவும் கூறினார். ஃபரிதாபாத் **இஎஸ்ஐ** மருத்துவக் கல்லூரி

மருத்துவமனையின் புதிய சிகிச்சை வசதிகளையும், அமைச்சர் இந்நிகழ்ச்சியின் போது தொடக்கி வைத்தார்.

*வருமானவரி மசோதா*

புதிய வருமானவரி மசோதா பற்றிய 31 உறுப்பினர் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் கூட்டம், அதன் தலைவரும் பிஜேபி நாடாளுமன்ற தலைவருமான திரு பைஜெயந்த் பாண்டா தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் இன்று நடைபெற்றது. இந்திய கணக்கு தணிக்கையாளர் கழகம், மற்றும், E & Y பன்னாட்டு தணிக்கை நிறுவனத்தின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டு இருந்தனர்.

*அதிரடி சோதனை*

SDPI கட்சிக்கு எதிரான பணச் சலவை வழக்கில் புலனாய்வு பணிகளின் ஒரு பகுதியாக, அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் இன்று நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் அதிரடி சோதனை மேற்கொண்டனர். புதுடெல்லி, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் உள்ள இக்கட்சியின் தலைமை அலுவலகங்களும் இதில் அடங்கும்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

உத்தராகண்ட் மாநிலத்தில், **குளிர்கால சுற்றுலா** தொடர்ந்து மேம்படுத்தப்படும் என, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

**சர்வதேச மகளிர் தின**த்தை ஒட்டி, வரும் 8-ஆம் தேதி புதுடெல்லியில் நடைபெற உள்ள, **தேசிய மாநாட்டை**, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தொடக்கி வைக்கிறார்.

புதுச்சேரியில், **சிறப்பு கூறுகள் திட்ட நிதி**யை முழுமையாக செலவிடுவதில், சம்பந்தப்பட்ட துறைகள் ஒருங்கிணைப்பாக செயல்பட வேண்டும் என, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் அறிவுறுத்தி உள்ளார்.

புதுச்சேரியில், புதிய உத்திகள் மூலம் **சைபர் குற்றங்**களை கண்டு பிடிப்பது குறித்து, காவல் துறை அதிகாரிகளுக்கான 2 நாள் பயிற்சி வகுப்பு, இன்று தொடங்கி உள்ளது.
இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 6.3.2025/Script.

------------------------------------